# கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்

## அமர்வு வழக்கு எண்.132/2025

## அ.சா. 6 (LW 10 )

| **பெயர்** | **திரு. அழகுராஜா** | **தொழில்** | |
|---|---|---|---|
| **த/க பெயர்** | சீத்தாராமன் | **மதம்** | |
| **கிராமம்** | | **வயது** | |
| **தாலுகா** | | **தேதி** | **03.03.2026** |

1873ம் வருடத்திய சட்டம் பிரிவு 10ன்படி பிரமாணத்தின் பேரில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

1,2,3,5 எதிரிகள் ஆஜர். 4ம் எதிரி இறப்பு

**முதல் விசாரணை**

நான் செங்கல்பட்டியில் குடியிருந்து வருகிறேன். டிரைவராக வேலை செய்கிறேன். என்னிடம் காட்டப்படும் 1வது எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1வது கையெழுத்து என்னுடையதுதான். அந்த கையெழுத்து மட்டும் **அ.த.சா.3.** ஆகும். 1வது எதிரியை தெரியாது. கடந்த 2014ம் வருடம் தேதி,மாதம் ஞாபகம் இல்லை. நான் திண்டுக்கல் வந்து விட்டு எனது ஊருக்கு வருவதற்காக பஞ்சம்பட்டி பிரிவு சென்று கொண்டிருந்த போது அம்பாத்துறை காவல் ஆய்வாளர் 2 நபர்களை விசாரித்துக் கொண்டிருந்தார்கள். அவர்கள் கொடுத்த வாக்கு மூலங்களை ஆய்வாளர் பதிவு செய்து கொண்டார். அதில் நான் கையொப்பம் செய்தேன். உடன் கையொப்பம் செய்தவரை ஞாபகம் இல்லை. அத்தாட்சில் உள்ள 1வது கையெழுத்து என்னுடையது தான். அந்த கையெழுத்து மட்டும் **அ.த.சா.ஆ.4**. ஆகும். ஆய்வாளர் பதிவு செய்த அத்தாட்சி என்னிடம் காட்டப்படுவது தான். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**2,3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

போலிசார் என்னிடம் கையெழுத்து வாங்கும் போது கணிணியில் எதுவும் தட்டச்சு செய்தார்களா என்றால் இல்லை. நான் போலிசாரிடம் எழுதாத வெள்ளை பேப்பரில்தான் கையெழுத்திட்டேன் என்றால் சரிதான். நான் கையெழுத்து செய்த பின்பு அந்த தாளில் போலிசார் என்ன எழுதிக் கொண்டார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். போலிசார் விசாரித்த 2 நபர்களை என்ன வழக்கு தொடர்பாக எதற்காக விசாரித்தார்கள் என்பது பற்றி எனக்கு தெரியாது.

**1 மற்றும் 5 வது எதிரி தரப்பில் மேற்படி குறுக்கு விசாரணையை ஏற்றுக் கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.**

**மறு விசாரணை – இல்லை.**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

SWARNAM J RAJAGOPALAN

Digitally signed by SWARNAM J RAJAGOPALAN
Date: 2026.03.03 20:24:13 +0530

Additional District and Sessions Judge,

Dindigul.